மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | CC 48/24 |
| பெயர் | : | முத்துலெட்சுமி (PW2) |
| த/பெ. | : | ஆதிராமன் |

(Accused Ambikavathi is present. )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24 th day of January 2025

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** ( மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை)( சாட்சிக்கு அவரது முதல் விசாரணை படித்துக் காண்பிக்கப்பட்டது)

1)எதிரி என் உடன்பிறந்த அக்காவின் கணவர்.அவர் ராணுவத்தில் 40 வருடங்களாக பணியில் இருந்தார் என்றால் ராணுவத்தில் இருந்து பணி நீக்கம் செய்யப்பட்டு இருந்தார்.ராணுவத்தில் பணியாற்றி எதிரி ஓய்வு ஊதியம் நிறைய பெற்றிருந்தார் என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது.எதிரியின் மனைவி யசோதா அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தார் என்றால் சரிதான்.நான் 100 நாள் வேலை திட்டத்தில் வேலை செய்து வருகிறேன்.

2)எதிரி தற்போது இருக்கும் வீட்டின் தீர்வை ரசீது , மின்கட்டண ரசீது ஆகியவை எதிரியின் மனைவியின் பெயரில் பத்து வருடங்களாக உள்ளது என்றால் இல்லை என் பெயரில் தான் இருந்தது எதிரி எப்படியோ 2 வருடங்களுக்கு முன்பாக மாற்றிவிட்டார்.என் வீட்டின் கதவு எண் என்ன என்றால் எனக்கு படிப்பறிவு இல்லாததால் எனக்கு சொல்லதெரியவில்லை.வீட்டைக்கேட்டு உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன், அவரிடம் கேட்டு சொல்கிறேன்.

3)சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் வீட்டிற்கு எதிரில் ராமராஜ் என்பவரின் வீடு உள்ளது.மேலும் சில வீடுகள் உள்ளது அந்த வீட்டில் ஆட்கள் உள்ளார்கள்.சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் வீட்டிற்கு முன்னால் ஒரு இரும்பு கேட் உள்ளது என்றால் சரிதான்.அந்த வீட்டிற்குள் எத்தனை அறைகள் உள்ளது என்றால் 3 அறைகளும் ஒரு போர்டிகோவும் உள்ளது.வெளியே சுற்றுசுவர் ஒரு ஆள் உயரதுக்கு உண்டு என்றால் சரிதான்.

4)போர்டிகோவில் இருந்து இரண்டு படிகள் இறங்கி தான் கிரில் கேட்டிற்கு வரமுடியும் என்றால் சரிதான்.நான் அன்று படுத்திருந்தது வயர் கட்டில் அதன் ஓரம் கம்பியால் இருக்கும்.சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் போது என் சத்தம் கேட்டு யார் யார் வந்தார்கள் என்றால் யாரும் வரவில்லை நான் தான் தங்கத்தின் வீட்டிற்கு ஓடினேன்.எதிரி என்னை அரிவாளை வைத்து வெட்டியதாக முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் எனக்கு வாயில் காயம் ஏற்பட்டிருந்ததால் என்னால் பேச இயலவில்லை, வாய் முழுவதும் கம்பியால் கட்டி எனக்கு சிகிச்சை அளித்திருந்தார்கள்.எனக்கு காயம் எவ்வாறு ஏற்பட்டது என்று மருத்துவரிடம் நான் சொல்லவில்லை என்றால் சரிதான், வாயில் காயம் ஏற்பட்டிருந்ததால் நான் பேச முடியாத நிலையில் இருந்ததால் நான் சொல்லவில்லை.

5)அசா3 தங்கத்திடம் நான் சம்பவம் எப்படி நடந்தது என்று நான் சொல்லவில்லை என்றால் சரிதான் அவர் வீட்டிற்கு செல்லவும் நான் மயங்கிவிட்டேன்.நான் திருநெல்வேலி மருத்துவமனைக்கு சென்றபின்னர் தான் அசா1 மதியழகன் அங்கு வந்தார் என்றால் இல்லை புளியம்பட்டியில் இருந்து என்னுடன் வந்தார் அவர் தான் 108 ஆம்புலன்சில் அழைத்து சென்றார்.ஒட்டுடன் பட்டியில் இருந்து நான் இரு சக்கர வாகனத்தில் சென்றேனா என்றால் இல்லை, ஆம்புலன்சா வேனா என்று தெரியவில்லை எனக்கு காயம் ஏற்பட்டதில் எனக்கு சரியாக தெரியவில்லை.நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிப்பதற்கு இன்றும் முதல் விசாரணையின் போது அசா1 வுடன் தான் வந்தேன்.

6)அசா1 மதியழகன் எதிரிக்கு சொந்தமாக இடத்தில் உள்ள மரங்களை வெட்டியதாக நாரைகிணறு காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்,மரத்தை வேண்டும் என்று வெட்டவில்லை.புகார் கொடுப்பதற்கு முன்பும் புகார் கொடுத்தபின்னரும் இன்று வரை அசா1 வும் எதிரியும் பேசிக்கொள்ளமாட்டார்கள் என்றால் சரிதான்.அசா1 தான் எனக்கு வழக்கு சம்பவத்திற்கு முன்னரும் வழக்கு சம்பவத்திற்கு பின்னரும் எனக்கு வேண்டிய தேவைகளை பார்த்து வருகிறார் என்றால் சரிதான்.

7)வீடு சம்மந்தமான ஆவணங்கள் எதையும் போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை.எதிரிக்கும் அவரது மனைவிக்கும் சொந்தமானது என்றாலும் அந்த வீட்டினை அசா1ன் பேச்சைக் கேட்டு அந்த வீட்டை அபகரிக்கும் வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால்

சரியல்ல.நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எதிரி அரிவாள் கொண்டு நாடியிலும் இடது மணிக்கட்டிலும் வெட்டி அதில் எனக்கு காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.வழக்கு சம்பவத்திற்கு முன்னர் எதிரிக்கு ஒரு விபத்து ஏற்பட்டு கம்பினை ஊன்றி தான் நடக்க இயலும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.எனக்கு தற்போது வயது 65.நான் கட்டிலில் இருந்து நான் கீழே விழுந்ததில் எனக்கு காயம் ஏற்பட்டது என்றாலும் அதை பயன்படுத்தி புகார் கொடுக்கப்பட்டது என்றாலும் சரியல்ல.எதிரி மீது கொலை வழக்கு எதுவும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.